தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, ஆனி 26, திருவள்ளுவர் ஆண்டு 2050

2019 ஜூலை 11, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஞாலம் கருதினும் கைகூடும், காலம்
கருதி இடத்தால் செயின்."

ஒரு தொழிலைச் செய்வதற்கேற்ற காலத்தையும், இடத்தையும் அறிந்து செய்தால் இந்த உலகத்தையே அடைய வேண்டுமென்று நினைத்தாலும் அது கைகூடும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 81, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

81—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***47732—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், ராஜேந்திரம் ஊராட்சியில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், ராஜேந்திரம் ஊராட்சியில் இருக்கின்ற நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தும் சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற மாணவர்கள் தொடர்ந்து கல்வியைப் பெற வேண்டும் என்பதற்காகத்தான் ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரமுயர்த்தி வருகிறோம். என்னுடைய தொகுதியில் இருக்கின்ற ராஜேந்திரம் ஊராட்சி என்பது, தஞ்சை main road-லிருந்து கிட்டத்தட்ட 3 கிலோ மீட்டர் தூரம் உள்ள ஒரு கிராமப் பகுதி. எனவே, என்னுடைய திருவையாறு தொகுதியில், ராஜேந்திரம் ஊராட்சி, ராமாபுரம் ஊராட்சி, நடுக்காவேரி, கூடலூர், செம்மங்குடி, திருமலைசமுத்திரம், வீரசிங்கம்பேட்டை போன்ற பகுதிகளில் உள்ள கிராமப்புற மாணவர்கள் தொடர்ந்து உயர்நிலைப் பள்ளி படிப்பைப் பெறுவதற்கு ஏதுவாக நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரமுயர்த்தி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

குறிப்பிடுகின்ற இடங்களில் இருக்கின்ற பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த வேண்டுமென்று சொன்னால், 3 ஏக்கர் நிலம் தேவை, முதலிலே தேவையான இடம் அங்கே இல்லை. ஒரு இலட்சம் ரூபாய் நிதி கட்டியிருக்க வேண்டும், அதுவும் கட்டப்பட்டதாக தெரியவில்லை.

இரண்டாவதாக, குறைந்தது 50 மாணவர்களாவது இருக்க வேண்டும். மொத்தமே 11 மாணவர்கள் மட்டும்தான் அங்கே இருக்கிறார்கள். அங்கே கூடுதலாக மாணவர்கள் வருவார்களேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஏற்று, அப்பள்ளிகளைத் தரமுயர்த்துவது பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல் என்னுடைய திருவையாறு தொகுதியில், இந்தலூர், கள்ளப்பெரமூர், கோவிலடி, பனவெளி, சாத்தனூர், வரகூர், கண்டியூர் போன்ற பகுதிகளில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் நீண்ட காலமாக அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் இருக்கின்றார்கள். அப்பள்ளிகளையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்தித் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நான்கு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். வருகின்ற ஆண்டில் அந்த உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணை பெறப்பட்டவுடன், முக்கியமாக எந்த இடத்தில் தேவையோ அந்த இடத்தில் முதலில் ஒரு பள்ளியைத் தரமுயர்த்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.

திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில எல்லைகளைப் பிரிக்கிறபோது குமரி மாவட்டம், கேரள மாநிலத்தோடு இணைக்கப்பட்டது. தமிழ் உணர்வின் காரணமாக பக்கத்தில் இருக்கிற கேரள மாநிலம் வேண்டாம், குமரி மாவட்டத்தை தமிழகத்தோடு இணைக்க வேண்டுமென்று போராடிய மார்ஷல் நேசமணி, பொன்னப்பநாடார், சி.எஸ். மணி, சிவன்பிள்ளை, நத்தேனியல் குஞ்ச நாடார் மற்றும் பல தலைவர்கள் குமரி மாவட்டத்தை தாய் தமிழகத்தோடு இணைப்பதற்குப் போராடி 1-11-1956 ஆம் ஆண்டு குமரி மாவட்டம் தமிழகத்தோடு இணைக்கப்பட்ட வரலாற்றை வருங்கால தலைமுறையினர் தெரிந்துகொள்ளக்கூடிய விதத்தில், அவர்களுடைய வரலாற்றைப் பாடப் புத்தகத்தில் இணைக்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய தலைவர்கள் அனைவருமே தமிழுக்காக வாழ்ந்தவர்கள். தமிழ் மண்ணில் தமிழுக்காகப் போராட்டங்கள் நடத்தி, அதற்காகவே தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களுடைய வரலாறுகளைப் பற்றி பாடத் திட்டங்களிலே கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறது. தாங்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருப்பதையும் அரசு ஏற்றுச் செயல்படும் என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.

முற்பகல் 10-05

திருமதி பெ. சீத்தாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட ஒலக்கூர் ஒன்றியம், கீழ்பசார் கிராமத்தில் தனியார் ஆரம்பப் பள்ளி ஒன்று

செயல்பட்டு வருகிறது. அந்தப் பள்ளியை எடுத்து நடத்தக்கூடிய நிறுவனர், அந்தப் பள்ளிக்குத் தேவையான கட்டட வசதி, குடிநீர் வசதி, கழிப்பிட வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் எதையுமே செய்து தரமாட்டேன் என்கிறார். அதுபற்றி அவரிடம் கேட்டால், நீங்கள் வேண்டுமானால் செய்து கொள்ளுங்கள் என்று சொல்கிறார். அப்பள்ளியில் 51 மாணவர்கள் படிக்கின்றார்கள். இரண்டு ஆசிரியர்கள் அங்கு பணிபுரிகின்றார்கள். அப்பள்ளியில் அடிப்படை வசதிகள் எதுவுமே இல்லாத காரணத்தினால், அப்பள்ளியை அரசே ஏற்று நடத்துமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். தனியார் பள்ளியை அரசு எடுத்து நடத்துவது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. அவர்கள் உடனே நீதிமன்றத்திற்குச் சென்று விடுவார்கள். அதேநேரத்தில், அப்பள்ளியில் infrastructure அதாவது, அடிப்படை வசதிகள் எதையுமே செய்து தரவில்லை என்று சொன்னால், அரசு அப்பள்ளி நிருவாகத்திற்கு உடனடியாக notice வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 82, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

82—

புதிய மின்மாற்றி

***22915—திரு. சு. ரவி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—